# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
## Provincial Department of Education – Northern Provi

## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2022

| | | |
|---|---|---|
| தரம் :- 11 | தமிழ் மொழியும் இலக்கியமும் I, II<br>Tamil Language and Literature I, II | நேரம் :- 3 மணித்தியாலம் |
| சுட்டெண்:....................... | 22 \| T \| I,II | மேலதிக வாசிப்பு நேரம் :-<br>10 நிமிடம் |

### தமிழ் மொழியும் இலக்கியமும் I

**கவனிக்க:**
- ❖ **எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.**
- ❖ **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட் விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- ❖ **உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

1. கடக்கக் கருதவும் வேண்டா. இங்கு **கருதுதல்** என்பதன் ஒத்தசொல்
   (1) நினைத்தல் (2) வெல்லுதல் (3) மறத்தல் (4) உதவுதல்

2. வெடிக்கக் காண்பன கொல்லையில் முல்லை. இங்கு **கொல்லை** என்பதன் ஒத்தசொல்
   (1) பக்கம் (2) தோட்டம் (3) மறைவு (4) தரிசு

3. இந்தக் கதிதான் எனக்கும். இங்கு **கதி** என்பதன் எதிர்ப்பதம்
   (1) சங்கதி (2) பிரகதி (3) நிர்க்கதி (4) கடுகதி

4. அது குறைந்தது என உயர்வு தாழ்வு கற்பித்தலாகாது. இங்கு **குறைந்தது** என்பதன் எதிர்ப்பதம்
   (1) சிறந்தது (2) கூடியது (3) மறைந்தது (4) நிறைந்தது

5. உன்னை அடையாட்டிக் காட்டுப்பள்ளி. இங்கு **கட்டுப்பள்ளி** என்பது
   (1) பள்ளிக்கூடம் (2) பாடசாலை (3) மயானம் (4) வாடிவீடு

**6. பொருளால் வேறுபட்ட சொற்களைக் கொண்ட தொகுதி**
   (1) பழனம், கழனி, வயல் (2) பொழில், கா, சோலை
   (3) அடவி, ஆரணியம், வனம் (4) மலை, வரை, கிம்புரி

**7. தொடர்பற்ற சொற்களின் இணைவு**
   (1) பாரிமகளிர் – அற்றைத் திங்கள் (2) கபிலர் – குறிஞ்சிப்பாட்டு
   (3) பாரி – பறம்புமலை (4) தாய் - தாலாட்டு

8. பொருளால் வேறுபடும் சொல்
   (1) ஓதுவிப்பார் (2) ஆசிரியர் (3) கணக்காயர் (4) மூத்தோர்

9. “செக்கன்டறி எடியுகேசன் ( Secondery Education ) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராகத் தமிழில் வழங்கும் கலைச்சொல் சொல்
   (1) ஆரம்பக் கல்வி (2) இரண்டாம் நிலைக் கல்வி
   (3) மூன்றாம் நிலைக்கல்வி (4) இடைநிலைக் கல்வி

10. ‘தொகுதி’ என்ற கூட்டத்தைக் குறித்த மரபுப்பெயருக்குப் **பொருந்தாதது**
(1) மலை (2) பறவை (3) மக்கள் (4) உயிர்

11. ஓசை கொண்டமைந்த சொற்களால் அமைந்த இணைமொழி
(1) அகடவிகடம் (2) ஆறஅமர (3) மலையும் மடுவும் (4) அங்குமிங்கும்

12. நகையும் பரிகாசமும் சேர்ந்து வரக் கவிபுனையும் ஆற்றல் மிக்கவன்
(1) அந்ததக்கவி (2) ஆசுகவி (3) விகடகவி (4) வசைக்கவி

13. இகபர இன்பம் என்ற அருஞ்சொற்றொடர் தரும் கருத்து
(1) கொடுத்து மகிழும் இன்பம் (2) இம்மைக்கும் மறுமைக்குமான இன்பம்
(3) அருமை பெருமை அறியாத இன்பம் (4) அகமும் முகமும் மலர்ந்த இன்பம்

14. ஒருவரது சிறப்பை அறிவதற்குரிய சிறந்த ஆதாரமாக அமைவது
(1) நரை, திரை, மூப்பு (2) நடை உடை பாவனை
(3) பட்டி தொட்டி (4) வாழையடி வாழையாக

15. அறிவியல் நடையுடன் **தொடர்புபடாதது**
(1) பகுப்பாய்வு (2) கற்பனை (3) நேர்ப்பொருள் (4) தர்க்கமுறை

16. துறவிகள் வசிக்கும் இடம்
(1) பன்னசாலை (2) ஆச்சிரமம் (3) மடம் (4) நிந்தகம்

17. தன்னிலை அறியாதவன் பிறர் நிலை அறியமாட்டான். என்ற கருத்துத் தரும் பழமொழி
(1) அன்னைக்கு உதவாதவன் யாருக்கும் ஆகான்
(2) அன்று எழுதியவன் அழித்து எழுதுவானா
(3) ஆக்கப் பொறுத்தவன் ஆறப்பொறுக்க வேண்டும்
(4) ஆடத்தெரியாதவனுக்கு மேடை கோணல்

18. ஒருவருக்கும் பயன்படாமல் போகும் நிலை
(1) காட்டில் எறித்த நிலவு போல (2) ஆண்டிகள் மடம் கட்டியது போல
(3) இலவு காத்த கிளி போல (4) இஞ்சி உண்ட குரங்கு போல

19. ‘வெண்ணிற மேகங்கள் நிலவை மூடி மூடி ஆலிங்கனம் செய்தன. இங்கு இடம்பெற்ற **மூடி மூடி** என்பது
(1) இரட்டைக் கிளவி (2) அடுக்குத் தொடர்
(3) அடுக்கிடுக்குத் தொடர் (4) இணைமொழி

20. ஆத்திரத்தோடு நண்பர் அவுக்கென எழுந்து வந்தார். இங்கு இடம்பெற்ற ஒலிக்குறிப்புச் சொல்
(1) ஆத்திரம் (2) அவுக்கென (3) எழுந்து (4) வந்தார்

- **பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க**

21. ககரம் **g** என்னும் ஆங்கில எழுத்துக்கு நிகராக ஒலிப்பது
(1) அங்கம் (2) அகம் (3) கதவு (4) மேகம்

22. பின்வருவனவற்றில் பெயரிடை நிலை பெற்றமைந்த பகுபதம்
(1) தருவான் (2) பாடுவான் (3) மகிழ்வான் (4) ஓதுவான்

23. பின்வருவனவற்றில் காலம் கரந்த பெயரெச்சம்
(1) மீன் சந்தை (2) கடிநாய் (3) உறுமீன் (4) வட்டநிலா

24. பின்வருவனவற்றில் வினையடை யாது
(1) அநாதையாக (2) விசாலமான (3) சிவந்த (4) பண்புள்ள

25. “கொடைப்பொருள் வேற்றுமை இடம்பெற்ற தொடர்
(1) எலிக்குப் பகை பூனை
(2) காந்தனுக்கு உரியது தீபன்
(3) கூலிக்கு வேலை செய்தான்
(4) நண்பனுக்கு வாக்குக் கொடுத்தேன்

26. ஏருழவன் என்பது எவ்வகைப் புணர்ச்சி
(1) தோன்றல் (2) திரிதல் (3) கெடுதல் (4) இயல்பு

27. எந்தையும் ஊடையேம் என்பது
(1) தன்மை வினைமுற்று
(2) வினையாலணையும் பெயர்
(3) படர்க்கை வினைமுற்று
(4) ஏவல் வினைமுற்று

28. அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்தொதி
(1) அங்கம், அச்சம், அத்தை, அந்தம்
(2) வாகனம், வீடு, வேந்தன், வைகை
(3) தாகம், தீங்கு, பாட்டு, பந்து
(4) சங்கு, சீதம், சுகம், சைகை

- **பொருத்தமற்ற சொற்தொகுதி இடம்பெற்றுள்ள சொற்தொகுதியைத் தெரிவு செய்க**

29. (1) வேற்றுமைத் தொகை : அருவி ஆர்ப்பரிப்பு, பூக்கள் மணம், மலைப்பூ
(2) உவமைத் தொகை : பால் நிலா, பூ முகம், கிளிப்பேச்சு
(3) பண்புத் தொகை : வெண்ணிலா, கண்ணீர், வெள்ளாடை
(4) உம்மைத் தொகை : அங்கவை சங்கவை, குன்று குழி, இரவு பகல்

30. (1) ஆக்கப்பெயர் : கடைக்காரன், முதலாளி, பெண்ணியம்
(2) கூட்டுப் பெயர் : கடலலை, எழுதுகோல், வானொலி
(3) தொழிற்பெயர் : பொங்கல், தையல், தேட்டம்
(4) வினையாலணையும் பெயர் : ஈன்றானை, அழுவானை, விழுந்தவள்

- **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க**

31. குற்றமிளைத்த பொதுமக்கள் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கும்படி .............................. கட்டளையிட்டார்
(1) நீதிபதி (2) ஜனாதிபதி (3) ஆயர் (4) ஆணையாளர்

32. பாடசாலை மாணவர்களில் போசாக்குக் குறைவுடையோரை இனங்காணும் படி பாடசாலைகளுக்கு அரசாங்கம் ........................... அனுப்பியது
(1) அறிக்கை (2) கடிதம் (3) சுற்றுநிருபம் (4) குறிப்பேடு

33. அத்தியாவசியப் பொருட்களுக்கான விலை நிர்ணயத்தை ......................... வெளியிட்டது
(1) அரசாங்கம் (2) நுகர்வோர் சபை (3) வணிகக்கழகம் (4) பாகாப்புச்சபை

34. எமது பாடசாலையில் முப்பது ஆண்டு சேவை செய்த ஆசிரியர்களைக் கௌரவிக்கும் வகையில் ......................... இடம்பெற்றது
(1) மணி விழா (2) பொன்விழா (3) முத்துவிழா (4) மாணிக்க விழா

- வாக்கியங்களின் முற்பகுதிக்குப் **பொருத்தமான** முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க

35. தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டிகளுக்கான போட்டியாளர்கள் தெரிவிடத்தை .......................
(1) அடைந்தது (2) அடைந்தனர் (3) அடையும் (4) அடைத்தது

36. வேந்தன் புவியியலைத் தெரிவு செய்ய, சசிக்குமார் வர்த்தகத்தைத் தெரிவு செய்ய நாங்கள் குடியுரிமையைத் தெரிவு ...................
(1) செய்தான்
(2) செய்யதவர்
(3) செய்யவர்
(4) செய்தோம்

- **கீழே தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்ளுக்கு விடை தருக**

பெண்ணென்று சொல்லிடலோ – ஒரு
பேயும் இரங்கும் என்பர்: தெய்வமே நினது
எண்ணம் இரங்காதோ? – அந்த
ஏழைகள் அங்கு சொரியும் கண்ணீர்வெறும்
மண்ணிற் கலந்திடுமோ? – தெற்கு
மாகடலுக்கு நடுவினிலே, அங்கோர்
கண்ணற்ற தீவினிலே – தனிக்
காட்டினிற் பெண்கள் புழுங்குகின்றார்

37. கவிஞர் எதிர்பார்ப்பாக அமைவது யாது
(1) பெண்களுக்கு நீதி வேண்டும்
(2) ஒரு தீவிலே பெண்கள் படும் துன்பத்தை கருத்தல் கொள்ள வேண்டும்
(3) பெண்களுக்கென்று ஒரு தீவு உள்ளது அதை அங்கிகரிக்க வேண்டும்
(4) பெண்ணென்றால் பேயும் இரங்கும் என்பதாகும்

38. தெய்வத்தின் மீது கவிஞருக்குள்ள வெறுப்பு யாது?
(1) பெண்கள் கண்ணீர் மண்ணில் கலத்தல்
(2) காட்டில் பெண்கள் வாழ்வது
(3) பெண்மீது பேயிரங்குகின்றது தெய்வம் இரங்கவில்லை என்பதாகும்
(4) கடலுக்கு நடுவிலே தீவை அமைத்தது

39. ‘கண்ணற்ற தீவு’ என்ற தொடர் தரும் கருத்து யாது
(1) தீவுக்கு கண் இல்லை
(2) தீவு பலராலும் கண்காணிக்கப்படுவது
(3) கவனிக்கப்படாத தீவு
(4) தனித்துவிடப்பட்ட தீவு

40. கீழே, சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால், கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க
அ - இது சோழ சாம்ராஜ்யம் பற்றி அறிய ஒரு மைல்கல் ஆகும்
ஆ - இதனைப் பொன்னியின் செல்வன் என்ற நாவல் சிறந்த எடுத்துக் கூறுகின்றது.
இ - வரலாற்றுக் கதைகள் இப்போது திரைப்படமாக்கப்படுவது சிறந்த தொன்றாக விளங்குகின்றது.
ஈ - ஆயினும் தமிழர் தமக்கென ஒரு தனி அடையாளத்தைக் கொண்டிருப்பதை இதனூடாக அறியலாம்.
உ - இது ராமசாமி ஐயர் கிருஷ்ணபிள்ளை எனப்படும் **கல்கி** என்பவரால் எழுதப்பட்டது

(1) இ, உ, அ, ஈ, ஆ (2) அ, உ, ஆ, ஈ, இ
(3) இ, ஆ, உ, அ, ஈ (4) அ, ஆ, ஈ, உ, இ

(40 புள்ளிகள்)